# மரங்களினால் மாநகரில் விளையும் ஆபத்து

## மாநகர மன்றத்தின் பலவீனமான நிர்வாகமே முழு காரணமாகும்




கோலாலம்பூர், மே 16-

கோலாலம்பூர் மாநகரில் மரங்கள் விழுந்து ஏற்பட்ட ஆபத்துக்கு மாநகர மன்ற நிர்வாக முறையில் நிலவிய பலவீனங்கள் காரணம் என்று பிரபல சமூக போராட்டவாதி யான டான்ஸ்ரீ லீ லாம் தை சாடினார். நகரில் உள்ள மரங்களினால் ஏற்படும் ஆபத்தை சோதிக்க தவறியது இதில் முக்கிய காரணமாகும்.

பொது இடங்களில் உள்ள மரங்களின் நிலை குறித்து முறையான விதிமுறைகளை ஏற்படுத்தாமல் போனதும் மாநகர மன்றத்தின் தவறாகும் என்றும் அவர் சொன்னார். அண்மையில் கடுமையான மழையின் போது பல இடங் களில் மரங்கள் வேரோடு சாய்ந்து உயிர் பலியும் வாகனங் களுக்கு பெருத்த சேதமும் சிலருக்கு காயங்களும் ஏற்பட்ட சம்பவம் குறித்து அவர் கருத்துரைத்தார்.

பருவநிலையை காரணம் காட்டி இது போன்ற தவறுகளை மறைக்க முடியாது. உடனடியாக மாநகர மன்றம் நகரில் உள்ள மரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

ஆங்காங்கே உள்ள பழைய மரங்களை மூத்த குடிமக்களுக்கு அவர் உவமை கூறினார்.

மூத்த குடிமக்களுக்கு அடிக்கடி மருத்துவ சோதனைகளும் சுகாதார



பராமரிப்பும் அவர்களால் ஏற்படும் பாதிப்பையும் கருதி அவர்களை கண்காணித்து சிகிச்சை வழங்குவதைப் போல இந்த மரங்களையும் அப்படி கருதி முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

குறைந்த பட்சம் ஓராண்டுக்கு ஒரு முறை அல்லது முடிந்த போதெல்லாம் இந்த மரங்களினால் ஏற்படும் ஆபத்தை கண்காணிக்க வேண்டும். அந்த மரங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை கண்டறிந்து அகற்ற வேண்டிய மரங்களை அகற்றி விட வேண்டும்.

சில வேளைகளில் வேர்களை மட்டும் துண்டித்து விட்டு மரங்களை விடும் போது அவை காலப்போக்கில் பொது மக்களுக்கே ஆபத்தாக விளைகின்றன.

இருக்கின்ற மரங்களை அகற்றி அந்த இடங்களில் மரச்செடிகளை நட வேண்டும்.

பெரும்பாலும் பசுமையை போற்றும் நடவடிக்கையாக இது விளங்கும். அதே வேளையில் மக்களுக்கான நிழல் தருக்களாக அவை விளங்கும் என்றார் அவர்.